# மாலிம்பட பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஜூன் 16 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஜூன் 16 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மாலிம்பட பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாலிம்பட பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங் களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது 06 நிர்மண வேலைகளுக்காக ரூபா 976,050 தொகையொன்று சபைக்கு கிடைத்திருந்த போதும் அத்தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கிரிமெடிமுள்ள அதிகாரிவிலகம பிரதான பாதையினை நிர்மாணிப்பதற்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 500,000 தொகை கடன்கொடுத்தோர் பட்டியலில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 96,613 பங்களிப்புத் தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,761,865 ஆகும்.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 08 கணக்கு விடயங்களைச் சேர்ந்த ரூபா 47,711,977 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாமல் காணப்பட்டது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 17 | பி.ச. 21 படிவத்தின் பிரகாரம் அடி இதழ்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | விதி 193 | பாதீட்டுக் குறைநிரப்பு மதிப்பீட்டு செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான மீதியினை ஒப்பிட்டு மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்காக காரணங்களை காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (iii) | விதி 194 முதல் 206 | பொருட் பதிவேடுகள் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது நிருவாக சுற்று நிருபம் | |
| (i) | 2005 மார்ச் 31 திகதிய சுற்று நிருப இலக்கம் 08/2005 | ஆதனக் கடன்களுக்காக அரச பங்களிப்புத் தொகை அரசினால் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். எனினும் 2009 ஆண்டிற்காக ரூபா 3,949 வும், 2010 ஆண்டிற்காக ரூபா 148,047 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 2006 பெப்ரவரி 06 திகதிய சுற்று நிருப இலக்கம் 05/2008 | சுற்று நிருப அறிவுரைகளின் பிரகாரம் சபையில் இருந்து சேவை ஒன்றாக பொது மக்களுக்கு விரைவாகவும், செயற்திறமையுடனும் மற்றும் தொடர்ச்சியாகவும் செய்வதென எழுத்துமூல பொறுப்பு ஒன்று ஏற்படும் வகையில் பிரகாரம் சேவை நியதிச் சட்டம் ஒன்று ஆக்கியிருக்கவில்லை. |
| (இ) | 2008 ஏப்ரல் 17 திகதிய பிரதான செயலாளரின் சுற்று நிருப இலக்கம் 7/1/4/1 | அனைத்து வெளிக்கள அலுவலர்களும் முன்னைய மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிகழ்ச்சித் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் அவ்வாறு அங்கீகரிக்கப்படாமல் வெளிக்கள அலுவலர்கள் நால்வருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 28,771 தொகையொன்று பிரயாணச் செலவு செலுத்தப்பட்டிருந்தது.<br><br>வெளிக்கள அலுவலர்களின் கடமைகள் பொறுப்பு வாய்ந்த அலுவலரின் மேற்பார்வைக்கு ஆளாகியிருக்கவில்லை. அத்துடன் வெளிக்கள பரிசோதனை அறிக்கைகள் சமர்பிக்கப்படுதலும் நடைபெற்றிருக்கவில்லை. |

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் சபையின் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,570,612 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,828,325 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மதிப்பீட்டு வருமானங்கள், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 03 திகதிய எனது கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் சரியானதல்ல என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி | குறைதல் சதவீதப்படி |
|---|---|---|---|---|
| | 2010 ரூபா. 000' | 2009 ரூபா. 000' | % | % |
| வீத வரி | 74 | 63 | 17.20 | - |
| நிலுவைக் கட்டணங்கள் | 271 | 306 | - | 11.39 |
| ஏனைய வருமானங்கள் | 7,131 | 5,463 | 30.51 | - |

2.2.2 நிலுவை வரிகள் மற்றும் கட்டணங்கள்

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 344,659 தொகையான வரி மற்றும் கட்டணங்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 அக்டோபர் 20 திகதிய பபா/கி/06/01 கொண்ட கடிதத்தின் மூலம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு முறையான திட்டமொன்று தயாரித்து அமுல் நடத்த வேண்டும் என விதித்திருந்த போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

---------------------------------------------

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 116,321 தொகையான தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 முத்திரைக் கட்டணம்

----------------------------------

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடம் ரூபா 2,900,000 தொகை மற்றும் திறைசேரியில் இருந்து ரூபா 24,000 முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 செலவினக் கட்டமைப்பு

----------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 9,046 | 7,261 | 1,785 | 8,083 | 6,714 | 1,369 |
| ஏனையவை | 4,678 | 4,403 | 275 | 3,989 | 2,997 | 992 |
| உப கூட்டுத் தொகை | 13,724 | 11,664 | 2,060 | 12,072 | 9,711 | 2,361 |
| மூலதன செலவுகள் | 9,578 | 8,206 | 1,372 | 6,121 | 2,580 | 3,541 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 23,302 | 19,870 | 3,432 | 18,193 | 12,291 | 5,902 |

2.4 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

------------------------------------------------------------------------------------------

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்று தரம் | 01 | 01 |
| இரண்டாரம் தரம் | 07 | 06 |
| ஆரம்ப தரம் | 12 | 09 |
| ஏனையவை | 03 | 08 |
| | 23 | 24 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கின் பிரகாரம் பதவியணிச் சம்பளத்திற்கான செலவு ரூபா 7,261,263 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் ரூபா 6,162,000

தொகை மாத்திரம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 1,099,263 இற்கான செலவு சபை நிதியத்திற்கு செலவுப் பொறுப்பாகியுள்ளது.

(இ) திறைசேரி செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதி முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 14 மற்றும் 2006 ஏப்ரல் 10 திகதிய இலக்கம் 28 கொண்ட சுற்று நிருபங்களின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்படல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 05 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பளமாக ரூபா 506,036 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்ததது. இந்த சுற்று நிருப அறிவுரைகளை தாண்டிச் சென்று ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படின் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட முறையில் பொறுப்பு வாய்ந்தவர் என சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 45,659 ஆகும்.

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,076,750 ஆகும்.

### 2.5.3 கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணிப்பீட்டு சபை அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படாத புத்தகப் பெறுமதியின் மீது கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 34,246,222 ஆகும்.

## 2.6 செயற்பாட்டுத் திறமையின்மை

### 2.6.1 காணிகளை சிறு துண்டுகளாக பகிர்தல் மற்றும் பொது வசதிக்கான காணிப் பகுதிகள் கிடைத்தல்

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாகந்த கொடஹேன என்ற காணிக்கு சொந்தமான 1.3939 ஹெக்டயர்கள் (3 ஏக்கர் 1 ரூட் 31.11 பர்சஸ்) அளவான காணி காணி அளவை வரைபு இலக்கம் 10/562 இன் மூலம் 33 துண்டுகளும், இலக்கம் 10/563 இன் மூலம் 26 துண்டுகளும் ஆக காணிகளை பகிர்வதற்காக 2010 ஜூன் 10 திகதி தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(i) நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரின் 1992 செப்டம்பர் 30 ஆந் திகதிய அபிவிருத்தி பிரமாணங்கள் சுற்று நிருப இலக்கம் 6.2(1) மற்றும் அவ் அதிகாரத்தின் 1986 மார்ச் 10 ஆந் திகதிய இலக்கம் 392/9 கொண்ட வர்த்தமானியின் கட்டளை இலக்கம் 22/1 இன் பிரகாரம் 551.11 பர்சஸ் (1.3939 ஹெக்டயர்கள்) களில் இருந்து பாதைக்காக 15.32 பர்சஸ் கழித்த பின்னர் மீதியாக இருப்பவற்றில் 10 சதவீதம் ஆகிய 53.579 பர்சஸ்களில் சனசமூக மற்றும் களியாட்ட விடயங்களுக்காக பொருத்தமான இடங்களில் இருந்து ஒதுக்கப்பட வேண்டும். எனினும் இரண்டு துண்டுகளின் மூலம் 27.91 பர்சஸ் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 25.669 பர்சஸ்கள் குறைவாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த இழந்த காணித் துண்டின் பெறுமதி ரூபா 1,925,175 ஆகும்.

(ii) மேற் கூறிய சுற்று நிருபத்தின் 2(iii) மற்றும் பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 154(6) இன் பிரகாரம் காணிகள் விற்பனை செய்யும் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 323,064 இற்கான 1% வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) சபைக்கு கிடைக்கும் பொது வசதிகளுக்காக பகுதி மிகவும் பொருத்தமான இடமொன்றில் வழங்க வேண்டும். எனினும் கிடைத்துள்ள 2 ஆம் இலக்க துண்டு கரடுமுரடான சரிவாகவும் 7 ஆம் இலக்க துண்டு கரடுமுரடான சரிவாகவும், சிறியதாகவும் காணப்பட்டது.

(iv) சனசமூக மற்றும் களியாட்ட விடயங்களுக்காகக் கிடைத்திருந்த 27.91 பர்சஸ் காணிப் பகுதிக்காக ரூபா 80,000 பெறுமதியை 1203 ஆம் இலக்க காணி உறுதி கிடைத்திருந்தது. எனினும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் இக் காணியின் பெறுமதி ரூபா 2,093,250 ஆக காணப்பட்டதுடன் குறைவாக காட்டிய பெறுமதி ரூபா 2,013,250 ஆகும். இதன் காரணமாக ரூபா 40,765 முத்திரைக் கட்டணத்தையும் சபை இழக்க வேண்டியுள்ளது.

(v) காணிகள் ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்கு முன்னர் விஞ்ஞான மற்றும் சுரங்க பணியகம் மற்றும் மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையின் ஏற்பாடுகளை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மின்சாரம் வழங்குதல் நிபந்தனையும் நிறைவேற்றப்படாமல் காணிகள் துண்டுகளாக விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) லிபேர்டி டெரஸ் - ஹொடகொட, தெலிஜ்ஜவில

---

இந்த காணிக்காக காணி அளவை வரைபு இலக்கம் 2959 இன் மூலம் 6 ஏக்கர் 2 ரூட் 10 பர்சஸ்(2.6557 ஹெக்டயர்கள்) பரப்பளவான காணி 2007 ஆகஸ்ட் 09 திகதிய இலக்கம் 2007/93 இலக்கம் குழுத் தீர்மானத்தின் பிரகாரம் 65 துண்டுகளாக பகிர்வதற்கு தலைவர் அனுமதித்திருந்தார்.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(i) மேற் கூறிய அபிவிருத்திப் பிரமாணங்கள் 6(iv) படி 1% வரியாக ரூபா 204,949 தொகையொன்று அறவிடப்பட வேண்டும். எனினும் ரூபா 80,704 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவை தொகை ரூபா 124,245 ஆகும்.

(ii) காணியினை துண்டுகளாக பகிரும் போது பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய பகுதிக்காக காணி உறுதி கிடைத்திருக்கவில்லை. அத்துடன் மிகவும் பொருத்தமான இடம் ஒன்றில் கிடைக்க வேண்டிய 40 ஆம் இலக்க காணித் துண்டு கற்கள் மற்றும்

பள்ளமாக இடம் ஒன்றாக காணப்பட்டது. மேலும் துண்டுகளாக பகிர்வதற்கு அங்கீகாரம் வழங்கும் போது குறிப்பிட்ட பாதைகளில் தார் போடுதல் மற்றும் மின்சாரம் வழங்கப்படல் போன்ற நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அத்துடன் காணித் துண்டுகள் சபைக்கு சொந்தமானது என குறிப்படும் அறிவித்தல் பலகை ஒன்று மற்றும் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை என 2011 ஜுன் 18 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) தெலிஜ்ஜவில அக்குரகொட பாதையில் பேலிகலஹேன காணி

---

இந்த காணிக்காக இலக்கம் 10சீ/2010 நில அளவை வரைபின் மூலம் 03 ஏக்கர் 5.60 பர்சஸ் (1.2283 ஹெக்டயர்கள்) பரப்பளவான காணி 42 துண்டுகளுக்கு பகிர்வதற்கு தலைவர் அனுமதித்திருந்தார்.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(i) மேற் கூறிய 2.6.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி பிரமாணங்கள் 6.2(1) மற்றும் 392/9 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் பிரகாரம் பகிரப்படும் காணியின் பாதைகளுக்கு ஒதுக்கிய பின்னர் சனசமூக மற்றும் களியாட்ட விடயங்களுக்காக 43.97 பர்சஸ்கள் கிடைக்க வேண்டும். எனினும் 20 ஆம் இலக்க துண்டின் மூலம் 10 பர்சஸ் மாத்திரம் கிடைத்திருந்தமையால் குறைவாகக் கிடைத்திருந்த காணியின் அளவு 33.97 பர்களாகும். இந்த காணிப் பகுதியின் பெறுமதி ரூபா 38,895 ஆகும்.

(ii) தலைவரின் 2010 செப்டம்பர் 08 திகதிய கடிதத்தின் மூலம் 27 இலக்கம் கொண்ட 01 ரூட் 3.65 பர்சஸ் பரப்பளவைக் கொண்ட பகுதி பாதுகாக்கப்பட்ட வலயம் ஒன்றாக ஒதுக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சபைக்கு சாட்டப்பட வேண்டிய பகுதி காணி உறுதி ஒன்றின் மூலம் சாட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இலக்கம் 27 பாதுகாக்கப்பட்ட பகுதிக்கு மாத்திரம் 2000 ஜுலை 24 திகதி இலக்கம் 209 கொண்ட நன்கொடை காணி உறுதி ஒன்றின் மூலம் சாட்டப்பட்டிருந்தது.

(iii) இந்த காணி பகிர்வு தொடர்பாக 2011 ஜுன் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் இவ்வாறு

* அபிவிருத்தி செய்யப்பட்ட காணியின் உட்பகுதி பாதைகள் மற்றும் வடிகால் முறைமை தொழில்நுட்ப அலுவலரின் அறிவுரையின் பிரகாரம் குறிப்பிட்ட தரத்துடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

* உட்பகுதி வடிகால் முறைமை மற்றும் தொடர்புடைய மதகு முறைப் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் நீர் வடிந்தோடுதல் தடையாக அமைந்துள்ளது.

* மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபைப் பணிப்பாளரின் 2010 ஜுலை 10 திகதிய கடிதத்தின் மூலம் நிர்மாணிக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்த அரைச்சுவர் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எல்கிரிய சனசமூக நிலையத்திற்காக காணி உரித்தாக்கல்

---

பகிரப்படாத காணி ஒன்றான இந்த காணியில் இருந்து 08 பர்சஸ் காணி ஒரு உரிமையாளரினால் நன்கொடைக் காணி உறுதி ஒன்றின் மூலம் சபைக்கு சாட்டப்பட்டிருந்ததுடன் சபையினால் அங்கு சனசமூக நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த சனசமூக நிலையம் நிர்மாணிப்பதற்கு எதிராக மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் 02 வழக்குகளும், மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் ஒரு வழக்கும் போடப்பட்டிருந்தது.

2.6.2 செயற்திட்டங்கள் அமுல் நடத்துவதில் தாமதம்

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஏற்பாடுகளின் கீழ் ரூபா 231,000 தொகையொன்று 04 செயற்திட்டங்களுக்காக கிடைத்திருந்ததுடன் அச் செயற்திட்டங்கள் 2011 ஜூன் 23 திகதி வரையும் அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை.

2.6.3 வீதி விளக்குகள் பராமரிப்பு

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குப் பராமரிப்பு தொடர்பாக 2011 ஜூன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வீதி விளக்குகள் பராமரிப்புகள் தொடர்பாக மின்சார உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது தேவைக்கு ஏற்ப பராமரிப்பு மின்தொழிலாளரின் விண்ணப்பம் அதற்காக தொழில்நுட்ப அலுவலரின் அங்கீகாரம் என்பவற்றின் ஊடாக கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அவ்வாறான செயன்முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கப்படும் வீதி விளக்குகளை தனித்தனியாக இனங்காணக் கூடிய விதமாக இலக்கங்கள் அல்லது குறியீடுகள் பதியும் முறைமையொன்றும் ஒவ்வொரு வீதி விளக்குகளுக்குமாக மின்குமிழ்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் பொருத்துதல் தொடர்பாக பதிவேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகளின் பராமரிப்புக்காக ரூபா 361,472 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதும் இலங்கை மின்சார சபையில் இருந்து ரூபா 21,456 தொகை மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 340,016 இற்கான செலவு சபை நிதியத்திற்கு செலவு பொறுப்பு ஒன்றாகியுள்ளது.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக் கட்டுப்பாடு

(உ) செலவுக் கட்டுப்பாடு